Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Sunday, March 27, 2022 | Rs.2/- | ISSUE - 256

# Kauvery Hospital performs successful pediatric liver transplants

## Living donor Liver Transplant performed on 2 year old boy and 4 year old girl suffering from Liver Failure

## The parent of both the children came forward to be donors

Chennai, March 27 2022: Kauvery Hospital Chennai, a unit of Kauvery Group of Hospitals, a leading multispecialty healthcare chain in Tamil Nadu, today announced two successful paediatric living donor liver transplants.




A girl child aged 4 years from Arakkonam, Chennai, and a boy aged 2 years from West Bengal, who were brought to Kauvery Hospital Chennai, were diagnosed to have liver diseases that needed a liver transplant at the earliest, to save their lives.

Speaking on the transplant procedure, Dr. Elankumaran K, Senior Consultant & Head - Liver Disease and Transplantation Centre said, "The first child, a 4-year-old girl was diagnosed with a rare genetic disorder which can be cured only through a liver transplant. After evaluation, her mother was found to be the suitable donor. The transplant was performed successfully and all underlying conditions were treated.

The second child, a 2-year-old boy, suffered from fever and jaundice for a week, and was later referred to our hospital for high-end treatment. The baby was diagnosed with Severe Liver Failure and was placed under Intensive Care. Soon he became unconscious and was taken up of for an emergency liver transplant. Evaluation of the members of the family led to his father emerging as a suitable donor. Within 2 days of admission, the child underwent Living Donor Liver Transplantation and recovered without any complications.

Both children were monitored and supported very carefully, under intensive care, by a highly experienced team of doctors, nurses and technicians. "Extending support beyond treatment' has been our motto, and we are glad to have achieved this in both these transplants.

Both the children recovered completely without any complications, and are active. The treatment charges of the 4-year-old girl child was met by the Tamil Nadu Chief Minister's Comprehensive Health Insurance Scheme (CMCHIS) while the 2-year-old child was partially funded by Kauvery Hospital and crowd funding.

Speaking on the occasion, Ms. Kanimozhi Karunanidhi, Hon'ble Member of Parliament, said, "I congratulate Dr Elankumaran and the team at Kauvery Hospital on the success of pediatric liver transplants. Liver Transplantation in our country was out of reach for many, and today Kauvery Hospital Chennai, which houses world renowned surgeons and state of the art infrastructure, has made the transplant services accessible and affordable for everyone, and have thus removed boundaries. The treatments which were funded through various sources have given a new lease of life to the children. This shall instill great hope among people who continue to be hesitant to undergo such treatments at private hospitals. I urge all parents to seek the right medical help at the right time, as children are the future leaders of our country. A child's health is the country's health and wealth."

Speaking on the success of the transplants, Dr. Aravindan Selvaraj, Co-Founder & Executive Director, Kauvery Hospital, Chennai said, "Performing paediatric liver transplant comes with a lot of challenges, and the right expertise under the right infrastructure are absolutely necessary for the success of a transplant. Specialised care in paediatric hepatology (the science of liver diseases) is provided to ensure that the child recovers without complications. We as a team aim to be number one in liver transplant, and we are proud to be providing liver transplants across tier 2 cities in Tamil Nadu, away from Chennai. Our vision is affordability and accessibility for liver transplants across all sections of the society. I congratulate Dr. Elankumaran and team for providing such comprehensive state of the art and science care for children with such life-threatening liver diseases, thereby helping them lead a good quality of life. Not many are aware that liver is an organ that has the potential to regrow in the donor after a portion is donated, and also grow to normal size in the recipient. This awareness can help families to come forward for living donor liver transplants thereby helping their loved ones lead a new lease of life."

# 'Zomato instant- 10 minute delivery' not in chennai

Chennai, March 27 2022: Taking into consideration certain concerns flagged by the media, a meeting was held by Additional Commissioner of Police Traffic, Greater Chennai Police, Tr. Kapil Kumar c Saratkar IPS, with delivery managers of major food aggregators and e-commerce service providers on 25.3.22. Representatives from major companies including Swiggyand Zomato participated. Action taken on various issues flagged in the first such meeting held on 10.7.21 was reviewed and progress



made in reducing traffic violations by E-Commerce delivery staff was analysed. It was observed that the traffic violations committed by delivery staff has reduced after the first set of meetings. Further steps to facilitate e-Commerce delivery in the city without public inconvenience and traffic violations were also discussed.

Food aggregator firm Zomato informed that the project of 'Zomato instant-10 minute delivery' was only a pilot project planned to be launched at few cities in India. It was also clarified by the company that Zomato instant is not planned to be launched in Chennai currently. It has been decided in the meeting that any such project by companies with promise of fixed delivery time will be initiated only with proper intimation and due coordination with Police department.

# Ministry of Ayush and World Health Organization signs Host Country Agreement for WHO Global Centre of Traditional Medicine



Chennai, March 27 2022: Ministry of Ayush has signed the Host Country Agreement with World Health Organization (WHO) for establishing WHO Global Centre for Traditional Medicine in India at Jamnagar, Gujarat, with its interim office at the Institute of Training and Research in Ayurveda (ITRA) in Gujarat. This Centre will be supported by an investment of about USD 250 million from the Government of India. The primary objective of GCTM is to harness the potential of traditional medicine from across the world through modern science and technology and improve overall health of the communities' world over.

The Agreement was signed on 25th March in Geneva by Vaidya Rajesh Kotecha, Secretary, Ministry of Ayush and Director General, WHO Dr. Tedros Adhanom Ghebreyesus. Last month, the Union Cabinet had approved the establishment of the Centre.

Prime Minister Shri Narendra Modi in his message for the historic event said, "It is heartening to learn about the signing agreement for the establishment of Global Centre for Traditional Medicine. Through various initiatives, our government has been tireless in its endeavour to make preventive and curative healthcare, affordable and accessible to all. The global centre at Jamnagar will help in providing the best healthcare solutions to the world."

On this occasion the Minister of Ayush Shri Sarbanand Sonowal said that his Ministry has got this pride due to the initiative and efforts of our illustrious Prime Minister Shri Narendra Modi. He further said that the centre will bring far-reaching benefits and reputation to traditional medicine systems around the world. He also said that this initiative will go a long way in helping the whole of humanity to get affordable and reliable health services. He informed the centre will bring availability of better system to connect with the latest scientific methods.

Highlighting the importance of Government of India initiative, the Director-General of WHO Dr Tedros Adhanom Ghebreyesus said that harnessing the potential of traditional medicine by drawing on modern science and principles of equity and sustainability will be a game changer for health in the 21st century.

GCTM will be the first and only Global Centre (office) for traditional medicine across the globe. It will focus on building solid evidence base for policies and standards on traditional medicine practices and products and help countries integrate it as appropriate into their health systems and regulate its quality and safety for optimal and sustainable impact.

Traditional medicine is a key pillar of health care delivery systems and plays a crucial role in maintaining good health and well-being not only in India but across the world. In recent year, traditional medicine therapies have also seen a major transformation as usage of artificial intelligence, technological innovations have made it more accessible to masses.

With adoption of modern technologies, the Artificial Intelligence (AI) is now being used to map evidence and trends in the traditional medicine and to screen natural products for pharmacokinetic properties. WHO-GCTM is designed to engage and benefit all the regions of the world. Groundbreaking ceremony will take place on 21st April, 2022 in the august presence of Prime Minister Shri Narendra Modi.

# Vice President calls for inculcating nationalistic values in youth



Chennai, March 27 2022: The Vice President, Shri M. Venkaiah Naidu today called for inculcating nationalistic values in youth and asserted that protecting national interests should be the highest duty of every citizen.

Advising youth to become change agents in society, he said that protecting national interests includes preserving India's rich heritage and cultural and linguistic diversity.

Observing that India always believed in the philosophy of 'Vasudhaiva Kutumbakam', he underlined the importance of promoting the concept of universal brotherhood across the globe.

The Vice President was releasing a book – 'Spoorthi Pradatha Sri Somayya', the life story of late Shri Somepalli Somaiah, a noted social worker from Andhra Pradesh. Shri Naidu mentioned that he considered Shri Somayya as one of his foremost 'gurus' and credited him for shaping his personality at a young age.

Shri Naidu recalled Shri Somayya's contributions in relief and reconstruction activities for the cyclone victims in Andhra Pradesh and said that he 'inspired many youth to devote their lives for the welfare of the people.'

Paying rich tributes to Shri Somayya for his commitment to nationalistic values, the Vice President called upon the youth to read and take inspiration from life stories of such leaders and freedom fighters. 'To practice and live by their principles and to become partners in our national progress is the greatest tribute we can pay to them, he said.

Referring to the challenges that are hindering the progress of the country like poverty, illiteracy, corruption and social discrimination, Shri Naidu called for concerted efforts to eradicate them and other social evils in society.

Shri Bandaru Dattatreya, Governor of Haryana, Shri Bhagayya, Member of All India Working Committee, RSS, Shri Balendra Potturi, President, Navayuga Bharathi, Shri Boorla Dakshina Murthy, Telangana Sanghachalak, Shri K. Syam Prasad, Author and other dignitaries were present during the event.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 27, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 256

# ஜூன் மாதத்தில் கொரோனா 4வது அலைக்கு வாய்ப்பு அதில் இருந்து நாம் மீள்வதற்கு தடுப்பூசி மட்டுமே தீர்வு

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



சென்னை, மார்ச் 27 2022: தமிழகத்தில் காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 100% கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தில் கொரோனா 4-வது அலை பரவ வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் இன்று 26வது கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. இதையொட்டி சென்னை மாநகராட்சியின் ஆலந்தூர் மண்டல அலுவலகத்தில் கொரோனா தடுப்பூசி முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில் கூறியதாவது:ரூகொரோனா தொற்று உலகை விட்டு இன்னும் நீங்கவில்லை. அண்டை மாநிலமான கேரளாவில் இன்னும் கொரோனா பரவல் தீவிரமாக உள்ளது. ஆசிய நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அதிக அளவில் தொற்று அச்சம் இருக்கிறது. தென் கொரியா, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இன்னும் லட்சக்கணக்கில் தொற்று எண்ணிக்கை பதிவாகி வருகிறது.

### தடுப்பூசி தான் தீர்வு

ஏற்கனவே கான்பூர் ஐ.ஐ.டி. மற்றும் பல மருத்துவ வல்லுனர்கள் சொல்லி இருக்கும் கருத்துப்படி, ஜூன் மாதத்தில் கொரோனா 4-வது அலை பரவ வாய்ப்புள்ளதாக தெரிகிறது. கொரோனா 4வது அலை தமிழகத்தில் வந்தாலும் அதனை தடுக்க மருத்துவ கட்டமைப்பு தயாராக உள்ளது.

4வது அலை வரும் பட்சத்தில் அதில் இருந்து நாம் மீள்வதற்கு தடுப்பூசி மட்டுமே தீர்வு என்பதால், 50 ஆயிரம் முகாம்கள் மூலம் 100 சதவீதம் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற இலக்குடன் மக்கள் நல்வாழ்வுத்துறை செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில் முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி கொரோனா தடுப்பூசி இயக்கம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் கொரோனா மெகா தடுப்பூசி முகாம்கள் தொடர்ந்து 26வது வாரமாக தமிழ்நாட்டில் மட்டும் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற மெகா தடுப்பூசி முகாம்களில் 3 கோடியே 90 லட்சத்து 41 ஆயிரத்து 963 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சுமார் 50 லட்சத்து 61 ஆயிரத்து 287 நபர்கள் முதல் தவணை தடுப்பூசி செலுத்தாமலும், 1 கோடியே 34 லட்சத்து 97 ஆயிரத்து 690 நபர்கள் 2ம் தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய நாட்களை கடந்து தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர். இவர்களுக்கு அந்தந்த மாவட்ட நிர்வாகங்களின் சார்பில் சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பிற சேவைத்துறை அலுவலர்களால் கணக்கெடுப்பு செய்யப்பட்டு குறுஞ்செய்தி வாயிலாகவும் தகவல் அனுப்பப்படுகிறது.

### சென்னையில் 99% பேர் முதல் தவணை செலுத்தி உள்ளனர்

12 முதல் 14 வயதுக்குட்பட்ட 10 லட்சத்து 91 ஆயிரத்து 841 (51.48%) சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 15 முதல் 18 வயதிற்குட்பட்டவர்களில் இதுவரை 28 லட்சத்து 58 ஆயிரத்து 680 (85.44%) நபர்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 20 லட்சத்து 37 ஆயிரத்து 866 (60.90%) நபர்களுக்கு 2ம் தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரை தமிழகத்தில் 18 வயது கடந்த நபர்களில் 92.10% முதல் தவணை தடுப்பூசியும் 75.50% இரண்டாம் தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரையில் தடுப்பூசி செலுத்துவதில் மிக சிறப்பான முறையில் 99% பேர் முதல் தவணை தடுப்பூசியும் 81% பேர் 2ம் தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 12,585 ஊராட்சிகளில் நேற்று இரவு வரை 3,240 ஊராட்சிகளும், 121 நகராட்சிகளில் 27 நகராட்சிகள் 100% தடுப்பூசி செலுத்தியுள்ளன. மேலும் 5 மாவட்டங்கள் 100% மேல் தடுப்பூசி செலுத்தியுள்ளன. 100% தடுப்பூசி செலுத்திய மாவட்டங்கள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு முதல்வர் கையொப்பமிட்ட பாராட்டுச் சான்றிதழ் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் வழங்கப்பட உள்ளது.

கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், அரியலூர் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் 100% தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. வெளி மாநில தொழிலாளர்கள் கூடுதலாக செலுத்தியதால் காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் 100%க்கும் மேல் முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் வரை முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய 16 லட்சத்து 19 ஆயிரத்து 745 நபர்களில் 7 லட்சத்து 52 ஆயிரத்து 278 நபர்களுக்கு (45.08%) தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கொரோனா தொற்று பரவல் குறைந்தாலும் அரசின் கொரோனா தடுப்பூசி இயக்கம் தொடர்ந்து முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர்கள் டாக்டர் எஸ். மனீஷ், சிம்ரன் ஜீத் சிங் காஹ்லோன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் டாக்டர் செல்வ விநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எம்.எஸ்.ஹேமலதா, மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காவேரி மருத்துவமனையில் சாதனை!

## சிறு குழந்தைகளுக்கு வெற்றிகரமான கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை

### கல்லீரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்டிருந்த 2 வயது சிறுவன் மற்றும் 4 வயது சிறுமிக்கு உயிருள்ள தானமளிப்பவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரல்கள் பொருத்தப்பட்டன

### இந்த இரு குழந்தைகளின் பெற்றோர்களே இவர்களுக்கு கல்லீரலை தானமாக கொடுத்திருக்கின்றனர்.




சென்னை, மார்ச் 27 2022: தமிழ்நாட்டில் பிரபல பன்முக சிகிச்சை மருத்துவமனைகள் குழுமமாக புகழ் பெற்றிருக்கும் காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின்ஒரு அங்கமான சென்னை காவேரி மருத்துவமனை, உயிருள்ள தானமளிப்பவர்களிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலைக் கொண்டு இரு சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை வெற்றிகரமாக நிகழ்த்தியிருப்பதை இன்று பெருமிதத்துடன் அறிவித்திருக்கிறது. சென்னைக்கு அருகிலுள்ள அரக்கோணத்தைச் சேர்ந்த 4 வயதுள்ள ஒரு பெண் குழந்தையும் மற்றும் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த 2 வயதான ஒரு சிறுவனும் சென்னை காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர். இந்த இரு சிறார்களுக்கும் முறையே கல்லீரல் கோளாறு மற்றும் கல்லீரல் செயலிழப்பு இருப்பது பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டது. கல்லீரல் நோய் மற்றும் உறுப்பு மாற்று சிகிச்சை மையத்தின் தலைவரும் மற்றும் முதுநிலை நிபுணருமான டாக்டர். இளங்குமரன், இந்நோயாளிகளின் நிலைமைகள் மற்றும் வழங்கப்பட்ட சிகிச்சைகள் பற்றி கூறியதாவது: “4 வயதான சிறுமிக்கு ஒரு அரிதான மரபியல் கோளாறு இருப்பது நோயறிதல் சோதனையில் கண்டறியப்பட்டது; கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை வழியாக மட்டுமே இதனை குணப்படுத்த இயலும். மதிப்பீட்டு சோதனைகளுக்குப் பிறகு, இச்சிறுமியின் தாய் தானமளிக்கப் பொருத்தமானவராக இருப்பது கண்டறியப்பட்டது. அவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலை இந்த உறுப்புமாற்று சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது மற்றும் அது தொடர்பான அனைத்து பாதிப்பு நிலைகளுக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த 2 வயதான சிறுவனுக்கு ஒரு வார காலத்திற்கு காய்ச்சலும், மஞ்சள் காமாலை பாதிப்பும் இருந்திருக்கிறது. எனவே, அதன்பிறகு உயர்நிலை சிகிச்சை அவசியத்தைக் கருதி, எமது மருத்துவமனைக்கு அக்குழந்தை பரிந்துரைக்கப்பட்டது. கல்லீரல் செயலிழப்பு இக்குழந்தைக்கு இருப்பது உறுதி செய்யப்பட்டதால், தீவிர சிகிச்சைப் பிரிவில் குழந்தை அனுமதிக்கப்பட்டான். தொடர்ச்சியான மருந்துகளின் மூலம் இச்சிறுவனுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அதன்பிறகு, இவன் உணர்விழந்த காரணத்தால், அவசரமாக கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் உருவானது. அவனது குடும்பத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்குப் பிறகு இச்சிறுவனின் தந்தை, தானமளிக்கப் பொருத்தமானவராக இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள், உயிருள்ள தானமளிப்பவரான அவரது தந்தையிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலைக் கொண்டு இந்த உறுப்புமாற்று சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. எவ்வித சிக்கல்களும் இல்லாமல், இச்சிறுவன் குணமடைந்து பாதிப்பிலிருந்து மீண்டிருக்கிறான். ‘சிகிச்சைகளையும் கடந்து ஆதரவுக்கரம் நீட்டுவது’ என்பது எமது குறிக்கோளாக இருந்து வருகிறது. உறுப்புமாற்று சிகிச்சை செயல்பாடுகளிலும் எமது குறிக்கோளை நாங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது.”

உறுப்புமாற்று சிகிச்சை செய்யப்பட்ட இந்த இரு குழந்தைகளும் எவ்வித சிக்கல்களும் இல்லாமல் முழுமையாக குணமடைந்திருக்கின்றனர் மற்றும் இப்போது இயல்பான குழந்தைகளைப்போல சுறுசுறுப்பாக விளையாடுகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சரது விரிவான உடல்நலக் காப்பீடு திட்டத்தின் கீழ் அரக்கோணத்தைச் சேர்ந்த 4 வயது பெண் குழந்தைக்கு இந்த உயர் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 2 வயது சிறுவனுக்கு சிகிச்சை செலவுகளில் ஒரு பகுதியை காவேரி மருத்துவமனை ஏற்றுக்கொண்டது மற்றும் கிரவுட் ஃபண்டிங் என அழைக்கப்படும் பலர் வழங்கிய நிதியுதவியும் இக்குழந்தைக்கு கிடைத்தது.

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி இந்நிகழ்வு குறித்து பேசுகையில், “சின்னஞ்சிறு குழந்தைகளுக்கான கல்லீரல் உறுப்பு மாற்று சிகிச்சைகள் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதற்காக டாக்டர். இளங்குமரன் மற்றும் காவேரி மருத்துவமனையின் குழுவினரை நான் பாராட்டுகிறேன். நமது நாட்டில் கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை பலருக்கும் எட்டாத கனியாகவே இருந்திருக்கிறது. இன்றைக்கு உலகப்புகழ்பெற்ற அறுவைசிகிச்சை மருத்துவர்கள் மற்றும் மிக நவீன சாதனங்களுடன் உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டிருக்கின்ற சென்னை காவேரி மருத்துவமனை, உறுப்புமாற்று சிகிச்சை சேவைகளை பலரும் பெற்று பயனடையுமாறு செய்திருக்கிறது. மாநில எல்லைகளையும் மற்றும் வசதி வரம்புகளையும் கடந்து இச்சேவை கிடைக்கப்பெறுவதை ஏதுவாக்கியிருக்கிறது. பல்வேறு ஆதாரங்களிலிருந்து பெற்ற நிதியின் மூலம் செய்யப்பட்டிருக்கும் இச்சிகிச்சைகள், இந்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு புதிய வாழ்க்கையை தந்திருக்கிறது. தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு செல்ல இன்னும் தொடர்ந்து தயக்கம் காட்டுகின்ற மக்கள் மத்தியில் இந்த வெற்றிகரமான சிகிச்சை மக்கள் மனதில் நம்பிக்கை விதையை நிச்சயமாக விதைக்கும். நமது நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக இன்றைய குழந்தைகளே இருப்பதால், சரியான நேரத்தில் சரியான மருத்துவ உதவியைப் பெற அனைத்துப் பெற்றோர்களும் உறுதியோடு முன்வர வேண்டுமென்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகளின் ஆரோக்கியமே நாட்டின் ஆரோக்கியம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.” என்று கூறினார்.

சென்னை காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனரும், செயலாக்க இயக்குனருமான டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் இந்த வெற்றிகரமான உறுப்பு மாற்றுசிகிச்சை குறித்துப் பேசுகையில், “குழந்தைகளுக்கான கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை செய்வது அதிக சவால்கள் நிரம்பியதாகும். உறுப்புமாற்று சிகிச்சையின் வெற்றிக்கு சரியான உட்கட்டமைப்பு வசதிகளும், மருத்துவக் குழுவினரின் சரியான, அனுபவம் மிக்க நிபுணத்துவமும் கட்டாயம் அவசியம். குழந்தைகளுக்கான கல்லீரலியலில் சிறப்பு சிகிச்சைப் பராமரிப்பானது, எவ்வித சிக்கல்களும் இல்லாமல் இக்குழந்தைகள் பாதிப்பு நிலையிலிருந்து மீண்டு குணமடைவதை உறுதி செய்வதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு குழுவாக, கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையில் முதன்மை மருத்துவ மையமாக திகழ்வது எமது நோக்கம். இதைச் சார்ந்து, சென்னை தவிர, தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம்நிலை நகரங்களிலும் கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சைகளை நாங்கள் வழங்கி வருவது எங்களுக்கு பெருமையளிக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கும் கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை எளிதில் தரத்தக்கதாகவும் மற்றும் மிதமான கட்டணத்தில் வழங்குவதாகவும் செய்வதே எமது தொலைநோக்குப் பார்வையாக இருக்கிறது. சிறப்பான வாழ்க்கையை வாழ உதவுவதற்காக இக்குழந்தைகளுக்கு வெற்றிகரமான, முழுமையான சிகிச்சையை வழங்கியதற்காக டாக்டர். இளங்குமரன் மற்றும் அவரது குழுவினரை நான் மனமார பாராட்டுகிறேன். கல்லீரலில் ஒரு பகுதியை அகற்றியதற்குப் பிறகு மீண்டும் வளரும் திறன் கொண்ட ஒரு உடலுறுப்பாக கல்லீரல் இருக்கிறது என்ற உண்மையை பலரும் இன்னும் அறிந்திருக்கவில்லை. இதுகுறித்து விழிப்புணர்வானது, தங்களது அன்புக்குரியவர்களுக்கு கல்லீரல் பாதிப்பு நிலையில் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தை அவர்கள் தொடங்க உதவுவதற்காக உயிரோடு இருக்கும்போதே தானமளிப்பதற்கு குடும்பத்தினர் மனமுவந்து முன்வருவதற்கு உதவும்." என்று கூறினார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# தமிழ் பயனாளிகளுக்காக ஜோதிடம் மீது "நல்லநேரம்" மற்றும் சமையல் மீது "ஆஹாஎன்னருசி" என்ற ஆடியோ சாட் ரூம்களை வழங்கும் ஷேர்சாட்

### தமிழ் தொலைக்காட்சியில் பிரபலமான ஜோதிட நிபுணர்கள் மற்றும் விருந்தோம்பல் தொழில்துறையைச் சேர்ந்த செஃப்கள் இந்த அமர்வுகளில் பங்கேற்கின்றனர்


திருநெல்வேலி, 27 2022: இந்தியாவின் முன்னணி சமூக ஊடகதளமான ஷேர்சாட், ஜோதிடம் மீது "நல்லநேரம்" மற்றும் சமையற்கலைகள் மீது "ஆஹாஎன்னருசி" என்ற பெயர்களில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள சாட்ரூம்சீரிஸ் அறிமுகம் செய்யப்படுவதை அறிவித்திருக்கிறது. ஒருவாரத்தில் இரண்டு அமர்வுகளாக இது செயல்படுத்தப்படும். டாக்டர்.ஆதித்யா குருஜி மற்றும் டாக்டர். ஆண்டாள் சொக்கலிங்கம் போன்ற நாடெங்கும் பிரபலமாக அறியப்படும் ஜோதிடவியல் நிபுணர்களிடமிருந்து பயனாளிகள் ஜோதிட கண்ணோட்டங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக இந்த ஜோதிட ஆடியோ சாட்ரூம் நிகழ்வுகள் அமையும். இம்மாநிலத்தில் முதன்மையான ஹோட்டல்களில் பணியாற்றுகின்ற பிரபல



செஃப்களுடன் கலந்துரையாடவும் மற்றும் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் சமையற்கலை ஆர்வலர்களுக்கு "ஆஹாஎன்னருசி" என்ற பெயரில் வழங்கப்படும் செஃப் ஸ்பெஷல் சாட்ரூம் அமர்வு வகை செய்யும். இதில் செஃப் அஜித்குமார் (ஹோட்டல்அம்பாஸிடர் -பல்லவா) மற்றும் செஃப் தமிழரசன் (ஹோட்டல் கே ஸ்ரீ எம் ஸ்பெக்ட்ரா வில்சோஸ் செஃப்) ஆகிய பிரபல சமையற்கலை நிபுணர்கள் பங்கேற்கின்றனர். இந்த தொடர் நிகழ்வின் போது சித்தர்களின் பாடல்களும், கற்பிதங்களும் தமிழ் கலாச்சாரத்தில் மிக ஆழமாகவும், வலுவாகவும் பதிந்திருப்பவை. தமிழ் மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் புரிந்து வைத்திருக்கும் ஷேர்சாட், இந்த ஜோதிடவியல் அமர்வுகளை தனது பார்வையாளர்களுக்காக வழங்குகிறது. டாக்டர்.ஆதித்யா குருஜி மற்றும் டாக்டர்.ஆண்டாள் சொக்கலிங்கம் ஆகிய முக்கிய ஜோதிடவியல் நிபுணர்களுடன் தொகுப்பாளியாக சரண்யா சாய்பிரசாத் பங்கேற்கும் இந்நிகழ்வு, சனி, ராகு மற்றும் கேது ஆகியவற்றின் தாக்கங்கள் போன்ற தலைப்புகளை ஆய்வு செய்து ஜோதிட கணிப்புகளை வழங்கும். மார்ச் 16 ஆம் தேதியிலிருந்து தொடங்கி, ஏப்ரல் 11 வரை வழங்கப்படும் ஷேர்சாட் ஜோதிடவியல் சாட்ரூம் அமர்வுகள் ஒவ்வொரு திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் இரவு 7.00 மணியிலிருந்து - 8.00 மணி வரை நடைபெறும். "செஃப் ஸ்பெஷல் சாட்ரூம்அமர்வு, மார்ச் 19லிருந்து தொடங்கி ஏப்ரல் 10 வரை நடைபெறும். மாலை 6.30 மணியிலிருந்து மற்றும் மாலை 7.30 வரையும் மற்றும் ஞாயிற்றுக்கிழமையன்று காலை 11:00 மணியிலிருந்து, இரவு 12:00 மணி வரையும் இந்த அமர்வு நடத்தப்படுகிறது.

# விருகம்பாக்கம் பகுதியில் ஆண்நபரை காரில் கடத்திச் சென்ற வழக்கில் 6 நபர்கள் கைது. கடத்தப்பட்ட நபர் பத்திரிமாக மீட்பு. 1 கார் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல்

சென்னை, மார்ச் 27 2022: விருகம்பாக்கம், கங்கையம்மன் கோயில், தாங்கல் ஏரிக்கரை அருகே இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரை மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் வழிமறித்து நிறுத்தி, அவரை கையால் தாக்கி அருகிலிருந்து காரில் ஏற்றி தப்பிச் சென்றதாக காவல் கட்டுப்பாட்டறைக்கு கொடுத்த தகவலின்பேரில், ஆர்-5 விருகம்பாக்கம் காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்ததில், அயனாவரத்தைச் சேர்ந்த ரவி என்பவரை தாக்கி கடத்திச் சென்றதும், எதிரிகளின் கார் மற்றும் 2 இருசக்கர வாகனங்களும் அம்பத்தூர் நோக்கி சென்றதும் தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் துரிதமாக செயல்பட்டு, ஆவடி காவல் ஆணையரகத்திற்கு தகவல் கொடுத்து, அம்பத்தூர், சூரப்பட்டு அருகே மேற்படி கார் மற்றும் 2 இருசக்கர வாகனங்களை மடக்கி பிடித்தபோது, காரில் இருந்த நபர் மற்றும் 1 இருசக்கர வாகனத்தில் இருந்த நபர் என




2 எதிரிகள் தப்பியோடவே, கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் வந்த 6 எதிரிகளை மடக்கி பிடித்து, கடத்திச் செல்லப்பட்ட ரவியை மீட்டனர்.

விசாரணையில் பிடிபட்ட நபர்கள், 1.நஸ்ருதீன், வ/26, த/பெ.மீரான், எண்.18, அப்பாதுரை பிரதான சாலை, அயனாவரம், சென்னை, 2.அஜய்குமார், வ/23, த/பெ.புருசோத்தமன், எண்.42, சத்தியவாணி முத்து நகர், கன்னிகாபுரம், புளியந்தோப்பு, 3.சுனில், வ/26, த/பெ.பால்கர், எண்.02/03, டாக்டர்.அம்பேத்கர் நகர் 1வது தெரு, அயனாவரம், 4.கோபிநாத், வ/27, த/பெ.ஏழுமலை, எண்.75, 1வது குறுக்குத் தெரு, புது நகர், அயனாவரம், 5.சாம்சன், வ/27 த/பெ.ஜான் அருளானந்தம், எண்.110/225, மேட்டு தெரு, அயனாவரம், 6.திலீப், வ/27 த/பெ. ஜெகந்நாதன், எண்.433, சாஸ்திரி நகர், 6வது தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை ஆகியோர் என்பதும், இவர்கள் கூட்டு சேர்ந்து தி.நகர், ராஜா சார் தெருவைச் சேர்ந்த ரவி, வ/54, த/பெ.சரவணன் என்பவரை கடத்திச் சென்று மீட்கப்பட்டதும் தெரியவந்தது. அதன்பேரில், எதிரிகள் 6 நபர்களும் கைது செய்யப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 செவர்லட் கார் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

